


# வடுவூர் பறவைகள் சரணாலயம்

## வடுவூர் பறவைகள் சரணாலயம்

வடுவூர் பறவைகள் சரணாலயம் தமிழ்நாட்டின் திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 22.07.1999ல் ஏற்படுத்தப்பட்ட இச்சரணாலயம் 128 ஹெக்டர் மொத்த பரப்பளவு கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் பிரபல நகரங்களில் ஒன்றான தஞ்சாவூரிலிருந்து 25கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வருடம் தோறும் அதிக அளவில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு "இடம்பெயரும்" நீர்பறவைகள் இச்சரணாலயத்திற்கு வருகை புரிகின்றன. இவைகள் வடஇந்தியா, மத்திய ஆசியா, திபெத், லடாக் மற்றும் ரஷ்யா போன்ற இடங்களிலுருந்து வருகின்றன. வெள்ளை அரிவாள்மூக்கன், நத்தை கொத்தி நாரை, நீர்காகம், புள்ளிமூக்கு கூழக்கடா, ஊசிவால் வாத்து, நாமக்கோழி, சிறவி மற்றும் பவளக்கால் உள்ளான் முதலிய நாற்பது வகையான நீர்பறவையினங்களின் வருகை இச்சரணாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.



வடஇந்தியாவிலிருந்து வழக்கமாக வருகைதரும் நத்தை கொத்திநாரை

இச்சரணாலயத்தில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் வாத்து மற்றும் சிறவியினப் பறவைகள் மிகுதியாக இருப்பதால் பறவைகளின் எண்ணிக்கை உச்சத்தில் இருக்கும். இச்சரணாலயத்திற்குள் உள்ள மண்குன்றுகள் இடம்பெயர்ந்து வரும் நீர் பறவைகளுக்கு இளைப்பாறுமிடமாக விளங்குகின்றன. மேற்படி மண்குன்றுகள் மீது கருவேள், நீர்கடம்பு மற்றும் கொடுக்காபுளி முதலிய மரங்கள் நீர்பறவைகள் இளைபாறுவதற்கு நடப்பட்டுள்ளன. கொக்கு, வக்கா, மடையான் மற்றும் பலவகை மீன்கொத்தி போன்ற பறவையினங்கள் இச்சரணாலயத்திலேயே வசிப்பவற்றுள் அடங்கும். இச்சரணாலயத்தில் வக்கா மற்றும் மடையான் போன்ற நீர்பறவைகள், கூடுகட்டி குஞ்சு பொரிக்கும் நிகழ்வு வழக்கமாக நடைபெற்று வருகிறது.



இமயமலை பகுதியிலிருந்து அதிகமாக வருகைதரும் வெள்ளை அரிவாள் மூக்கன்

## வடுவூர் சரணாலயத்திற்கு வருகைதரும் நீர்பறவைகள்



உலக அளவில் அழியும் தருவாயில் உள்ள சாம்பல் நிற கூழைக்கடா



ரஷ்யாவிலிருந்து அதிக அளவில் வருகைதரும் ஊசிவால் வாத்து



இச்சரணாலயத்திலேயே வசித்து வரும் மடையான்



உலகின் பெரிய வாத்துகளில் ஒன்றான புள்ளிமூக்கு வாத்து



நவம்பர் - டிசம்பர் மாதங்களில் அதிக அளவில் வரும் நாமக்கோழி



இடம் பெயரும் உள்ளூர் நீர்பறவை நீர்காகம்

இச்சரணாலயம் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் முடிய தண்ணீர் பெறும், அடிப்படையான பாசன ஏரியாகும். ஜனவரி மாதம் நீர் வற்றத் துவங்கி மார்ச் மாத வாக்கில் முழுமையாக வற்றிப் போய்விடுகிறது. இச்சரணாலயம் தஞ்சாவூர் – மன்னார்குடி நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளதால் ஏரளமான பொதுமக்கள் பார்வையிட வருகின்றனர். பறவைகளை கண்டுமகிழ சாலையோரத்தில் ஒரு பார்வை மாடமும், சரணாலயத்தின் உள்ளே ஒரு பார்வை மாடமும் உள்ளன.

வழித்தடம் மற்றும் தங்கும் வசதி: அருகாமையில் உள்ள நகரம் தஞ்சாவூர் (25 கி.மீ.) அருகாமை இருப்புபாதை நிலையம் தஞ்சாவூரிலும், விமான நிலையம் திருச்சிராப்பள்ளியிலும் (80 கி.மீ.) உள்ளன. நிதி நிலைமைக்கேற்ற விடுதிகள் மற்றும் நட்சத்திர அந்தஸ்துள்ள விடுதிகள் தஞ்சாவூரில் உள்ளன. சரணாலயத்தின் உள்ளேயும் ஒரு சிறிய ஒய்வு விடுதி உள்ளது.

பார்வையிட தகுந்த காலம்: பறவைகளை ஏராளமாக கண்டு மகிழ, வாத்து மற்றும் சிறவி போன்ற பறவைகள் அதிகமாக காணப்படும் டிசம்பர் மாதம் பொதுவாக சிறந்த காலமாகும். பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் ஏராளமாக நத்தை கொத்தி நாரைகள் இச்சரணாலயத்திற்கு வருகின்றன.

- **நஞ்சை நிலங்களை காப்பீர். அவை குடிநீருக்கு பிரதான மறு ஆதாரம்.**
- **நஞ்சை நிலங்கள் உணவுக்கு முக்கிய ஆதாரம். அவற்றை மாசு படாமல் காப்போம்.**




தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**வன உயிரின காப்பாளர்**
329, மூன்றாவது தளம்
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
நாகப்பட்டினம், தமிழ்நாடு – 611 003.
போன்: 04365 253092.

**வனச்சரகர்**
562, தனலெட்சுமி இல்லம்,
திருவள்ளுவர் நகர்,
தஞ்சாவூர் – 619 005.